செ.வெ.எண்-01 நாள்-01.03.2021

# அரியலூர் மாவட்டம்

# அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிகளுடன் தேர்தல் நன்னடத்தை விதிகளை பின்பற்றுதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியரகக்கூட்டரங்கில், இந்திய தேர்தல் ஆணையம் தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு தேதி அறிவிக்கப்பட்டு, தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் அமலுக்கு வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து அரியலூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரதிநிதிகளுடன் தேர்தல் நன்னடத்தை விதிகளை பின்பற்றுதல் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று (01.03.2021) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள் முன்னிலை வகித்தார்.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

2021 சட்டமன்ற பொதுத்தேர்தல் 06.04.2021 அன்று நடைபெறும் என இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட 149.அரியலூர் மற்றும் 150.ஜெயங்கொண்டம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. எனவே, அரசியல் கட்சி பிரமுகர்கள் தேர்தல் காலங்களில் கடைபிடிக்க வேண்டிய தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்தால் வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொரோனா பெருந்தொற்று காலத்தில் தேர்தல் நடைபெறுவதால், கொரோனா தடுப்பு வழிமுறைகளை அனைத்து நபர்களும் முறையாக பின்பற்றிட வேண்டும். அதன்அடிப்படையில் தேர்தல் பிரச்சாரங்களில் வீடு வீடாகச் சென்று ஈடுபடும் நபர்கள் போட்டியிடும் வேட்பாளர்களையும் சேர்த்து (பாதுகாவலர்கள் நீங்களாக) 5 நபர்களுக்கு மிகாமல் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், தேர்தல் பிரச்சாரங்களில் 5 வாகனங்களுக்கு மட்டுமே (பாதுகாப்பு வாகனங்களை தவிர்த்து) அனுமதி வழங்கப்படும். அடுத்த ஐந்து வாகனங்கள் 30 நிமிடங்கள் கழித்து அப்பகுதிகளுக்கு செல்ல அனுமதிக்கப்படுவர். இந்திய தேர்தல் ஆணையத்தால் அனுமதிக்கப்பட்ட மட்டுமே பொதுக்கூட்டங்கள் நடத்திட வேண்டும். இக்கூட்டங்களில் கொரோனா தடுப்பு வழிமுறைகளை முறையாக பின்பற்றிட உறுதி செய்யும் வகையில் சுகாதார ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டு கண்காணிக்கப்படுவர்.

பேரிடர் மேலாண்மை ஆணையத்தால் கொரோனா தடுப்பு நிர்ணயிக்கப்பட்ட பங்கேற்பாளர்களின் எண்ணிக்கைக்கு மிகாமல் கூட்டம் நடத்தப்பட வேண்டும். இக்கூட்டங்களில் கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கூட்டங்களில் கலந்துகொள்ளும் அனைவரும் முககவசம் அணிதல், சானிடைசர் கொண்டு கைகளை சுத்தம் செய்தல், தெர்மல் கருவி மூலம் உடல் வெப்ப நிலையினை கண்காணித்தல் உள்ளிட்டவைகளை அரசியல் கட்சினர் உறுதி செய்ய வேண்டும்.

மேலும், பிரச்சாரங்களில் ஈடுபடும் வாகன அனுமதி மற்றும் பொதுக்கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் ஒதுக்கீட்டை ஒற்றை சாளர முறையில் பெற சுவிதா (SUVIDHA) செயலியை கூகுள் செயலியில் இருந்து பதவிறக்கம் செய்து, பயன்படுத்தலாம். இதன் மூலம் அனுமதி விபரங்கள் மின்னணு முறையில் விரைவாக வழங்கப்படும். மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தால் பொதுக்கூட்டங்கள் நடைபெற அனுமதி வழங்கப்பட்ட இடங்கள் மற்றும் புதிய இடத்தில் பொதுக்கூட்டங்கள் நடத்திட அனுமதி பெற விண்ணப்பிக்கலாம். எனவே, அரசியல் கட்சி பிரமுகர்கள் அனைவரும் இந்திய தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளை முறையாக கடைபிடித்து, தேர்தல் சுமூகமாக நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், வருவாய் கோட்டாட்சியர்கள் ஏழுமலை (அரியலூர்), அமர்நாத் (உடையார்பாளையம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பூங்கோதை மற்றும் வட்டாட்சியர்கள், அனைத்து அரசியல் கட்சி பிரமுகர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்**